1986 மே 14]

சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி.

753—(*வினா எண். 9121) திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதியை சேர்ந்த சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தொழில் நுட்ப பயிற்சி நிலையம் நிறுவ அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டில் நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 10–20.)

திரு. சா. ஜெயச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல் நிலைப்பள்ளி தமிழகத்திலே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்களின் பள்ளிகளில், மிகவும் சிறந்த ஒரு பள்ளியாக விளங்கி வருகிறது. அங்கே ஆயிரக்கணக்கான மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அங்கே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமல்லாமல் அனைத்து வகுப்பினரும் அதிகபட்சமாகப் பயின்று வருகிறார்கள். மிகவும் சிறப்பு வாய்ந்த பள்ளியாக அது இருக்கிறது. எனவே இது சம்பந்தமாக அங்கே ஒரு ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் நிறுவ வேண்டுமென்று அந்தப் பகுதியிலேயுள்ள சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிந்துரை செய்யப்பட்டு அரசு அதிகாரிகளும் பார்வையிட்டு ப்ரப்போஸல் அனுப்பி இருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இப்போது இருக்கிறார்கள். எனவே தயவு செய்து சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஒரு பாலிடெக்னிக் அல்லது ஐ.டி.ஐ. நிறுவிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஐ.டி.ஐ. பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்று 1983 ஆம் ஆண்டு மே மாதம் பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பப்பட்டது. இருந்தாலும் 1985-86-ஆம் ஆண்டிலே நிதிநிலையைக் கருத்தில் கொண்டு திட்டக் குழுவால் இது ஏற்கப்படவில்லை; அவ்வாறு பரிசீலிக்கப்பெற முடியாது என்று சொல்லி

அங்கே நிதிநிலைமை காரணமாக ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் 1986–87-ல் பழங் குடியினர் நலத் திட்டத்தின் மூலமாக சங்கராயபுரத்திலே சிறிய அளவில் ஒரு தொழில் பயிற்சி நிலையம் ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. சா. ஜெயச்சந்திரன் ; மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நிதிநிலைமை சரியில்லை என்று கூறினார்கள். சிதம்பரம் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் தனி நபர்கள், ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த தனியார் ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் அமைக்க முன்வந்தால் அரசு அனுமதி அளிக் குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத்தலைவா அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையில் இந்தத் துறைக்கு சம்பந்தப்பட்டதல்ல. பழங்குடியினர் நலத் திட்டத் தின் மூலம் ஆதிதிராவிடர்களுக்குத் தனியாக ஏற்படுத்த வேண்டுமென்று அரசு கருதுகிற காரணத்தால் 1986–87-ல் சங்கராயபுரத்தில் ஒரு சிறிய தொழிற்கூடம் அமைக்க அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. மற்ற விவரங்களை மற்ற துறைகளில் கேட்டால்தான் அதற்கான விளக்கம் தெரிவிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

போடிநாயக்கனூரில் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதி மன்றம்.

748—(*வினா எண். 5651) திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் போடிநாயக்கனூரில் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசு திட்டம் வகுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : போடிநாயக்கனூரில் இரண்டாம் வகுப்பு குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் உயர்நீதிமன்றத்திடமிருந்தோ, வழக்குரைஞர் சங்கத்திடமிருந்தோ அல்லது பொதுக்களிடமிருந்தோ வரவில்லை. அவ்விதம் வரும்பொழுது நிதி நிலைமையை அனுசரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.